# 10 திருமுழுக்கு

நிர்மலா :- மணி அடிக்கின்றது. இப்போது எங்களுக்கு சமய பாடம் அல்லவா?

ஜசிந்தா :- ஆமாம், அதோ ஆசிரியரும் வருகின்றார்.

ஆசிரியர் :- வணக்கம் பிள்ளைகளே!

பிள்ளைகள் :- வணக்கம் டீச்சர்!

ஆசிரியர் :- பிள்ளைகளே (பாடத்தை ஆரம்பிப்பதற்கு முன்), தூய ஆவிக்கு பாடலொன்றைப் பாடுவோம்.

(மாணவர்களும் ஆசிரியரும் ''தூய ஆவியே, உம்மை... '' என்ற பாடலைப் பாடுகின்றார்கள். பாடல் முடிந்ததும்.)

ஆசிரியர் :- நாம் எவ்வாறு கத்தோலிக்கர் ஆனோம் என்பதை யாரால் கூற முடியும்?

நிர்மலா :- டீச்சர், நான் கூறுகின்றேன்... நாம் ஆறாம் தரத்தில் அதைப் பற்றிப் படித்தோம். நாம் அனைவரும் குழந்தையாக இருந்தபோது திருமுழுக்குப் பெற்றோம். அதனால்தான் கத்தோலிக்கரானோம்.

ஜசிந்தா :- டீச்சர், எனக்கும் நான் குழந்தையாக இருந்தபோதுதான் திருமுழுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அன்றைய தினம் எடுத்த படங்கள் எல்லாம் எங்கள் வீட்டில் இருக்கின்றன.

ஆசிரியர் :- மிகவும் நல்லது. நாம் அனைவரும் திருமுழுக்குப் பெற்றதால்தான் கத்தோலிக்கரானோம். இன்று உங்களுக்கு நான் திருமுழுக்கு அளிக்கும் விதம் பற்றிக் கற்பிக்கப் போகின்றேன்.

ஜசிந்தா :- டீச்சர், எனது தங்கைக்குத் திருமுழுக்கு அளிக்கும்போது அவளின் தலையிலே பாதர் நீர் ஊற்றுவதை நான் கண்டேன்.

ஆசிரியர் :- நல்லது. நன்றாக ஞாபகத்தில் வைத்துள்ளீர். இன்று நான் அதனை விளக்குகின்றேன். திருமுழுக்கு அளிக்கும்போது நீர், பாஸ்கா மெழுகுவர்த்தி, வெள்ளை ஆடை, திருத்தைலம் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன. நீங்கள் ஆறாம் தரத்திலே பத்தாம் பாடத்தில் அந்தப் படங்களைப் பார்த்திருப்பீர்கள்.

நிர்மலா :- ஆமாம் டீச்சர், நாங்கள் பார்த்தோம்.

ஆசிரியர் :- திருமுழுக்கு அளிப்பதற்கு சில படிமுறைகள் உள்ளன.

பெற்றிக் :- டீச்சர் அந்தப் படிமுறைகள் எந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன?

ஆசிரியர் :- இப்படிமுறைகள் ''திருவாழ்வு'' என்ற புத்தகத்தில் உள்ளன.

## திருமுழுக்குச் சடங்கு



படம் 10.1 திருமுழுக்கின் மூலம் வரவேற்கப்படல்

- திரித்துவப் புகழ். செபத்தோடு ஆரம்பித்தல்.

- பிள்ளைக்கு அளிக்க இருக்கும் (கிறிஸ்தவ) பெயரை விசாரித்தல்.

- பெற்றோர், ஞானப் பெற்றோர் ஆகியோரிடம் அவர்களின் பொறுப்பு களை விசாரித்து ஒப்படைத்தல்.

- பிள்ளையின் நெற்றியில் குருவானவர், (பெற்றோர், ஞானப் பெற்றோர்) சிலுவை அடையாளம் வரைதல். இது சிலுவை வழியாக கிறிஸ்து பெற்றுத் தந்த மீட்பின் அடையாளமாயிருக்கின்றது.

- இறைவாக்கு வழிபாடு, விசுவாசிகளின் மன்றாட்டு. கிறிஸ்தவ நம்பிக்கைக்குப் பதிலளிப்பதற்காக - இறைவார்த்தையை விளக்குவார்.
- தூயவர்களின் துணை வேண்டுதல்.

- அசுத்த ஆவியை ஓட்டும் செபம் : பாவமும் சாத்தானும் தோல்வியுறு வதை அடையாளப்படுத்துகின்றது.

- திருமுழுக்கு ஆயத்த எண்ணெய் பூசுதல் (oc)

- பிள்ளையின் தலை மீது கை வைத்துச் செபித்தல்.

- திருமுழுக்கு வார்த்தைப்பாடு அளித்தல் : சாத்தானை விட்டுவிட்டு மூவொரு இறைவனை விசுவசிப்பதாகப் பிள்ளைக்காக பெற்றோரும் ஞானப் பெற்றோரும் வாக்களிப்பர்.

- தலைமீது நீரை ஊற்றித் திருமுழுக்களித்தல் : திருமுழுக்கின் போது அவசியமானதும் கட்டாயமானதுமான படிமுறையாய் அமைவது... ‘‘(பெயர்) தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் நான் உன்னைக் கழுவுகிறேன்’’ இவ்வாறு கூறி அருட்பணியாளர் பிள்ளையின் தலைமீது மும்முறை நீரை ஊற்றுவார். இச்சடங்கின் வழியாக திருமுழுக்குப் பெறுபவர் நீரினாலும் தூய ஆவியாலும் திருமுழுக்குப் பெறுவார்.

- திருத்தைலம் (கிறிஸ்மா) பூசுதல் (SC) , குரு, இறைவாக்கினர், அரசராக திருமுழுக்கு கிறிஸ்மா எண்ணெயினால் திருப்பொழிவு செய்யப்படுவார்.

- வெண்ணிற ஆடை அணிவித்தல் : திருமுழுக்குப் பெறும் பிள்ளை கிறிஸ்துவை அணிந்து கொள்வதன் அடையாளமாக இது இருக்கின்றது.

- பாஸ்காத் திரியிலிருந்து மெழுகுவர்த்தியை ஒளியேற்றுதல்: கிறிஸ்துவினால் ஒளியேற்றப்படுவதை இது அடையாளப்படுத்து கிறது. இதனால் பிள்ளை உலகில் ஒளியின் பிள்ளையாய் வாழ வேண்டும்.

- இயேசு கற்பித்த செபம்.
- பெற்றோர், ஞானப் பெற்றோரை ஆசீர்வதித்தல்.
- இறுதி ஆசீர்

**திருமுழுக்குப் பற்றிய திருச்சபையின் சட்டங்கள் :-**

திருமுழுக்குத் தொடர்பான சட்டதிட்டங்கள் திருப்பீடச் சட்டத் தொகுப்பில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி,

- பிள்ளைக்கு, அதற்குரிய பங்கு ஆலயத்தில் திருமுழுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.
- பங்கிற்கு வெளியில் திருமுழுக்கு அளிப்பதாயின் தகுந்த காரணம் இருக்க வேண்டும்.
- பிள்ளை பிறந்து சில வாரங்களுக்குள் திருமுழுக்குக் கொடுக்க வேண்டும்.
- பிள்ளைக்குத் திருமுழுக்கு அளிப்பதற்குப் பெற்றோர் தகுந்த முறையில் ஆயத்தம் செய்ய வேண்டும். உதாரணம் : பங்கு தந்தைக்கு முன்கூட்டியே அறிவித்து அவரின் அறிவுரையைப் பெற்றுக் கொள்ளல். அவர்களும் ஆன்மீக ரீதியாக அதற்கு ஆயத்தம் செய்ய வேண்டும்.
- மரணத்தருவாயில் உள்ள பிள்ளைக்குக் கூடிய விரைவில் திருமுழுக்குக் கொடுக்க வேண்டும்.
- குழந்தைத் திருமுழுக்கின்போது பெற்றோர் இருவரில் ஒருவர் அல்லது


இலவச விநியோகத்திற்காக

பாதுகாவலர் தம் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். அத்துடன் அப்பிள்ளையைக் கத்தோலிக்க விசுவாசத்தில் அவர்கள் வளர்ப்பார்கள் என்ற உறுதிமொழியை பங்குத் தந்தைக்கு வழங்க வேண்டும்.

- மரணத் தருவாயில் உள்ள ஒருவர் திருமுழுக்குப் பெறுவதாயின் கிறிஸ்தவ மறையின் எதிர்பார்ப்பின்படி வாழ்வதாக வாக்குறுதியளிக்க வேண்டும்.

## செயற்பாடு

1. திருமுழுக்குப் படிமுறையில் முக்கியமான சந்தர்ப்பம் எது?
2. பாஸ்காத் திரியிலிருந்து மற்ற மெழுகுவர்த்தியை ஒளியேற்றுவதன் கருத்து யாது?
3. திருமுழுக்கின் முக்கிய சந்தர்ப்பங்களை வரைந்து அவற்றை முறையாக ஒட்டி சிறு கைந்நூல் ஒன்றைத் தயாரிக்குக.



**வாழ்க்கைக்கு...**

v¸•ÊUS AÎUP¨£k® £i•øÓPøÍ |ßS AÁ uõÛzx Ax £ØÔ¨ £[Sz u¢øu°h® ÷Pmk AÔ¢x öPõÒÍÄ®.